நாள்.19.12.2017

அ.வ.எண்.301/2014

வா.சா.2. ஜெயச்சந்திரன்

4ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

என் தகப்பனார் பெயர் ரத்தினசாமி தேவர். வழக்கு சொத்து என் அப்பாவின் அத்தைக்குரியது. அதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இது எங்களுடைய பூர்வீக சொத்து இல்லை என்றால் சரியல்ல. என் அப்பாவின் அத்தைக்கு இந்த சொத்து எவ்வாறு கிடைத்தது என்று தெரியாது. என் தகப்பனார் காலமாகும் வரையில்வழக்கு சொத்து குறித்து எங்களுக்கு எந்த ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். என் அப்பாவின் அத்தை அவருக்கு கொடுத்ததால் அவருடைய தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். என் அப்பா 1990ஆம் ஆண்டு காலமானார். 5ஆம் பிரதிவாதி பெயரில் என் அப்பா வா.சா.ஆ.13 ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்குத் தெரியாது. எனக்கு தமிழ் வாசிக்கத்தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 ஆவணத்தில் 13.08.1980 தேதியில் என் அப்பா 5ஆம் பிரதிவாதிக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என் அப்பாவினுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணம் ஒரு சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணத்தில் 12.08.1980 தேதியில் என் அப்பா 4ஆம் பிரதிவாதிக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என் அப்பாவினுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 மற்றும் 14 ஆவணப்படி 4, 5 பிரதிவாதிகள் வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் என்றால் எனக்கு அதுகுறித்து சரியாக தெரியாது. வா.சா.ஆ.14 ஆவணப்படி கிரயம் பெற்ற சொத்தை 4ஆம் பிரதிவாதி செல்லம் ஆசாரி 5ஆம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.15 ஆவணப்படி செல்லம் ஆசாரி நயினார் ஆசாரிக்கு கிரயம் கொடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணப்படி நயினார் ஆசாரி முழு உரிமையாளர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 முதல் 15 ஆவணங்கள் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்தபிறகு வழக்கு சொத்தில் இருந்த 4 மற்றும் 5 பிரதிவாதிகளிடம் 1992 - 1993 ஆண்டுவாக்கில் நானும் நாகராஜனும் சென்று கேட்டோம். அப்பொழுது எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றும் 2013-ல்தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு என் அம்மா மட்டும் ஒரே மனைவி. எங்களுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு விபரங்கள் அனைத்தும் நாங்கள் யாரும் சொல்லவில்லை. என் அப்பா 4ஆம் பிரதிவாதியிடமிருந்து

WEB COPY

எவ்வளவு தொகை வாங்கினார் என்று தெரியாது. அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எங்களிடம் அதற்கான ஆவணம் எதுவுமில்லை. 4ஆம் பிரதிவாதியிடம் 05.07.2012 தேதியில் சொத்து வேண்டுமென்று கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் எப்பொழுது பெறப்பட்டது என்று எனக்குத் தெரியாது. என் தம்பிதான் அதனைப் பெற்றார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் 31.05.1995 தேதியில் 4ஆம் பிரதிவாதி 5ஆம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது. என்னிடம காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் பேனாவால் இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளதில் சுருக்கொப்பமோ, கையொப்பமோ எதுவுமில்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டது யாரென்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணம் இந்த வழக்கிற்காக நாங்கள் உற்பத்திசெய்தது என்றால் சரியல்ல. என் அப்பா குடும்ப தேவைக்காகவும், கடனை அடைப்பதற்காகவும் 4, 5 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தினை 12.08.1980ல் கிரயம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னுடைய தம்பிகள். அவர்கள் இந்த வழக்கில் எதிர்வழக்காடவில்லை. அவர்கள் என் அப்பா குடும்ப தேவைக்காக 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்தது தெரிந்ததால்தான் எதிர்வழக்காடவில்லை என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. நாங்கள் வழக்குரையில் கோரியுள்ளது போல் பாகம் கேட்க உரிமை இல்லை என்றும், வா.சா.ஆ.13 முதல் 15 வரையிலான ஆவணங்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கேட்கவும் உரிமையில்லை என்றால் சரியல்ல. 4ஆம் பிரதிவாதியிடம் என் தகப்பனார் கடன் பெற்றதற்கும் அதனை திரும்ப செலுத்தியதற்கும் ஆவணம் எதுவுமில்லை என்றால் சரிதான். நான் எந்த உரிமையும் இல்லாமல் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது இல்லை என்றாலும் சரியல்ல. என் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 4, 5 பிரதிவாதிகள் சரியான பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் இந்த நீதிமன்றத்தில் வறியவர் வழக்கு எண் 32/96 என் வழக்கினை தாக்கல் செய்து தள்ளுபடியாகியது என்றால் எனக்குத் தெரியாது. பாகப்பிரிவினை கேட்க எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் எதாவது பலன் கிடைக்குமா என்று பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

<u>5ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>.

நான் கடந்த 4 ஆண்டுகளாக ஆட்டோ ஓட்டுகிறேன். அதற்கு முன்பு கிருஷ்ணன் கோவிலில் உள்ள ஆனந்த கேஸ் கம்பெனியில் வேலை பார்த்தேன். அந்த முகவரிக்குத்தான் வறியவர் வழக்கு எண் 32/96 வழக்கின் அறிவிப்பு வந்தது என்றால் வீட்டிற்குத்தான் வந்தது. என்னுடைய மற்ற

WEB COPY

சகோதரர்களுக்கும் வீட்டு முகவரிக்குத்தான் அறிவிப்பு வந்தது. வறியவர் வழக்கு எண் 32/96 வழக்கை தாக்கல் செய்த என் சகோதரர்கள் என்னிடம் அறிவிப்பு வரும் வாங்கிக்கொள்ளுங்கள் என்ற சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் வழக்கறிஞர்மூலம் ஆஜரானோம் அவர் பெயர் தெரியாது. என் அப்பா 09.02.1990 தேதியில் அண்ணா நகர், வடிவீஸ்வரம் என்ற முகவரியில் உள்ள என் சகோதரன் நாகராஜன் வீட்டில் வைத்து காலமானார். வழக்கு சொத்து தளவாய் தெருவில் அமைந்துள்ளது. 4, 5 பிரதிவாதிகளிடம அந்த சொத்தை கொடுத்தபிறகு நாகராஜன் வீட்டில் என் அப்பா 1980-லிருந்து வசித்து வந்தார் என்றால் சரிதான். அப்பொழுது எனக்கு சுமார் 20வயதிருக்கும். அப்பொழுது எனக்கு குடும்ப விஷயங்கள் குறித்து தெரியாது. என் அப்பா எனக்குத் தெரிய 4, 5 பிரதிவாதிகளிடம் வழக்கு சொத்தை கிரயம் கொடுத்துவிட்டு அண்ணாநகரில் உள்ள குடிசை வீட்டில் தங்கினார் என்றால் சரியல்ல. என் அப்பா வாங்கிய கடனுக்காக கூட்டுறவு சங்கத்தினர் ஜப்தி செய்ய வந்தார்கள் என்றால் சரிதான். அதுகுறித்து என் அப்பா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடியாகியது என்றால் எனக்குத் தெரியாது. என் அப்பா அவரது காலம் வரை கூட்டுறவு சங்கத்தின் கடனை முழுமையாக செலுத்தவில்லை என்றால் சரிதான். அந்த கடனை தீர்ப்பதற்காகத்தான் என் அப்பா 4, 5 பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை கிரயம் கொடுத்து 14.08.1980ல் கூட்டுறவு சங்க கடனை திரும்ப செலுத்தினார் என்றால் எனக்கு அந்த விபரம் தெரியாது. உரிய மறுபயன் பெற்றுக்கொண்டு 4, 5 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்து கிரயம் கொடுத்தார் என்றும் நான் அதுகுறித்து கேள்வி கேட்க எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 4ஆம் பிரதிவாதியிடமிருந்து என் தகப்பனார் செலவிற்காக பணம் வாங்கினார். என் அப்பா படிப்பறிவு உள்ளவர்தான். ஆங்கிலத்தில் கையெழுத்திடுவார் என்றால் சரிதான். உலக நடப்பு அறிந்தவர் என்றால் சரிதான். அவர் உடல் அளவிலும், மனதளவிலும் ஆரோக்கியமாகத்தான் இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு சொந்தமாக வருமானம்வரும் வேலையில்லாமல் இருந்தார் என்றால் விவசாயம் செய்தார், வருமானம் வரவில்லை. என் தகப்பனாருக்கு 6மகன்கள். எங்களை அவர்தான் பராமரித்து வந்தார். குடும்ப செலவிற்காக அவர் பல நபரிடம் கடன் வாங்கியிருந்தார் என்றால் தெரியாது. குடும்ப தேவைகள் இருந்தது. வழக்கு சொத்து என் அப்பாவின் தனிப்பட்ட சொத்தாகும். அவர் அதனை கிரயம் கொடுக்காமல் விட்டுச்சென்றிருந்தால்தான் எங்களுக்கு பாகம் கேட்க உரிமை உண்டு என்றால் சரியல்ல. என் அப்பா அவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்தை குடும்ப நன்மைக்காகத்தான் விற்றார் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளுக்கு என் அப்பா வழக்கு சொத்தை கிரயம் கொடுத்தார் என்றும் 4ஆம் பிரதிவாதி 5ஆம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்றும் சொன்னால் அது குறித்து எனக்குத்

WEB COPY

தெரியாது. 1995ஆண்டுமுதல் 5 ஆம் பிரதிவாதி வழக்கு சொத்தினை முழு உரிமையாளராக அனுபவித்து வருகிறார் என்றும் அது குறித்து கேள்வி கேட்க எங்களுக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து அமைந்துள்ள இடம் தற்போது நன்கு விலைமதிப்பு உடையதுதான். 5ஆம் பிரதிவாதி ஒரு பின்புலம் இல்லாத நபர் என்றால் தெரியாது. அவருடைய அந்த நிலையை பயன்படுத்தி அவரை மிரட்டி பணம் பறிக்க வேண்டுமென்று இந்த வழக்கையும், முந்தைய வழக்கையும தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள கூட்டுறவு சங்கத்திலிருந்த கிடைக்கப்பெற்றதாக கூறும் ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்கத்திலிருந்து வந்த அறிவிப்பு என் தம்பி நாகராஜனிடம் உள்ளது. கூட்டுறவு சங்கத்திற்கு நாங்கள் பணம் செலுத்தியிருந்தாலும் அதன்மூலம் எங்களுக்கு எந்த உரிமையும் கிடைக்காது என்றால் சரியல்ல. 1980ஆம் ஆண்டே என் அப்பா சொத்தை விற்றது எங்களுக்கு தெரியும் என்று உரிய காலத்திற்குள் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றும் நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

WEB COPY